# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, விசேட தேவைப் பாடுகள்கொண்ட சிறுவர்களுக்கான கோசல தூல்லாவ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, யூலை மாதம் 24 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 11.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

## 2009 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, விசேட தேவைப் பாடுகள்கொண்ட சிறுவர்களுக்கான கோசல தூல்லாவ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. கூட். 15/2006

### விசேட தேவைப்பாடுகள் கொண்ட சிறுவர்களுக்கான கோசல தூல்லாவ மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"விசேட தேவைப்பாடுகள் கொண்ட சிறுவர்களுக்கான கோசல தூல்லாவ மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவது மான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புடைய எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுறுதியுடன் கொண்டுநடாத்தி நிறைவேற்றும் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட கழகம் எந்தக் குறிக்கோள்களுக் காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் சொல்லப்பட்ட கழகம் இதற்கு முன்னர் வெற்றிகரமாக மேற்கொண்டும் நிறைவேற்றியும் வந்துள்ளதாதலாலும் கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப் பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2009 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, "விசேட தேவைப்பாடுகள் கொண்ட சிறுவர்களுக்கான கோசல தூல்லாவ மன்றம்" என எடுத்துக்காட்டப்படலாம்.

விசேட தேவைப்பாடுகள் கொண்ட சிறுவர்களுக்கான கோசல தூல்லாவ மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "கழகம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) விசேட தேவைப்பாடுகள்கொண்ட சிறுவர்களுக்கான கோசல தூல்லாவ மன்றத்தின் உறுப்பினர்களாக தற்போதுள்ளவர்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களு மான அத்தனை ஆட்களும் "விசேட தேவைப்பாடுகள் கொண்ட சிறுவர்களுக்கான கோசல தூல்லாவ மன்றம்" என்ற பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப் பட்டதொரு குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் இப் பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகார மும் கொண்டிருத்தலும் வேண்டும்.

2-PL 003160 -1,070 (2008/08)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் எந்தப் பொதுக் குறிக்கோள்களுக்காக அமைத்துருவாக்கப்படுகின்றதோ அந்தப் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப் படுகின்றது :-

(அ) உடல், உள ஊனங்கொண்ட வசதிகுறைந்த சிறுவர்களுக்கு அவர்களின் சாதி, குலம், நாட்டினம் அல்லது மதரீதியிலான பாகுபாடின்றி சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் பங்களிப்புச் செய்யக்கூடிய பயனுள்ள பிரசைகளாகச் செய்வதற்கு உதவி புரிதல் ;

(ஆ) ஊனமுற்ற சிறுவர்களினதும் இருபத்தைந்து வயது வரையிலான இளைஞர்களினதும் நலனில் துணைபுரிதல் ;

(இ) ஊனமுற்ற சிறுவர்களின் திறமைகளை அபிவிருத்தி செய்வதற்கு கருத்தரங்குகளையும் கூட்டங்களையும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் ஆய்வரங்குகளையும் நடத்துதலும் அவர்கள் சுயேச்சையாக இருப்பதற்கு ஊக்குவித்தலும் ;

(ஈ) ஊனமுற்ற சிறுவர்களுக்குக் கல்வியறிவூட்டுதலும் அவர்களுக்கும் ஏனையோருக்கும் ஆபத்து விளைவிக்காமல் அவர்களின் ஆற்றல்களையும் இயலாமையையும் மட்டுப்பாடுகளையும் பற்றி அவர்கள் அறிந்துகொள்ளச் செய்தலும் ;

(உ) சுயதொழில் கருத்திட்டங்களைத் தொடங்குதலும் உடல், உள ஊனமுற்ற இளைஞர்களை தொழிற் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபடுத்துதலும் ;

(ஊ) ஊனமுற்ற சிறவர்களின் பெற்றோர்கள், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் நாட்டின் அபிவிருத்திக்கு ஊனமுற்ற சிறுவர்களால் செய்யக்கூடிய பங்களிப்பைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல் ;

(எ) ஊனமுற்ற சிறுவர்களுக்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடைய ஏனைய ஒழுங்கமைப்புகளுக்கும் மானியங்கள், நன்கொடைகள், உதவி மற்றும் பாதுகாப்பு அளித்தல்;

(ஏ) ஊனமுற்ற சிறுவர்களின் நன்மைக்காக இலங்கையின் ஏதேனும் பாகத்தில் கருத்திட்டங்களை நடைமுறைப் படுத்துதல் ;

(ஐ) இலங்கையிலாயினுஞ்சரி வெளிநாட்டிலாயினுஞ்சரி கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக் கோள்களையுடைய வேறு ஒழுங்கமைப்புகளுடன் ஒருமித்துச் செயலாற்றுதல் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத் துச் செல்வதற்கு கூட்டுத்தாபனத்தால் அங்கீகரிக் கப்பட்ட எத்தன்மையதுமான ஏதேனும் பிள்ளைக்கு கூட்டுத்தாபனத்தின் செலவில் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் பயிற்றுவித்தல் அல்லது பயிற்று விக்கச் செய்வித்தல் ;

(ஓ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஊக்குவிப் பதற்கான விரிவுரைகளையும், கருத்தரங்குகளையும், ஆய்வரங்குகளையும், செயலமர்வுகளையும், கண்காட்சிகளையும் மற்றும் வேறு தோதான நிகழ்ச்சித்திட்டங்களையும், செயற்பாடுகளையும் தொடக்கிவைத்தல், ஒழுங்குசெய்தல் அத்துடன் நடாத்துதல் ;

(ஔ) ஊனமுற்ற சிறுவர்களுக்கு இலங்கையிலும் வெளிநாட்டிலும் பயிற்சியளித்தலும் விளையாட்டு நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்தலும் ;

(க) ஊனமுற்ற சிறுவர்களுக்கு களிப்பூட்டும் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல் ;

(ஙு) ஊனமுற்ற ஆட்களின் உரிமைகளை மேம்படுத்து வதற்கு இயைபான அதிகாரிகளுக்குச் சட்ட மறு சீரமைப்புகளை முன்வைத்தல் ;

(ச) ஊனமுற்ற சிறுவர்களின் வழக்குகளில் கூட்டுத் தாபனத்தின் செலவில் காப்பாளரின் அல்லது பாதுகாவலரின் நியமனத்தில் அவசியமான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(ஞு) நூலகங்களையும் புத்தகக்கடைகளையும் தாபித்தல்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4**. (1) கூட்டுத்தாபன அலுவலர்களின் முகாமைத்துவம், கட்டுப்பாடு, நிர்வாகம், என்பன இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கும் அமைய அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடிய வாறும் அதற்கிணங்கவும் தெரிவுசெய்யப்பட்டவர்களான அத்தகைய எண்ணிக்கையினரான பதவிதாங்குநர்களைக் கொண்ட முகாமைச்சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச்சபை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னரான நாளன்று பதவிவகிக்கும் மன்றத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது கூட்டுத்தாப னத்தின் விதிகளின்கீழ் புதிய முகாமைச் சபையொன்று தேர்ந்தெடுக்கப்படும்வரை பதவிவகித்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**5**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத் தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனமானது, அதன் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமாகின்றவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எத்தன்மையதுமான எல்லாச் செயல்களையும், கருமங்களையும், விடயங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், தொழிற்படுத்துதல், முடிவுறுத்துதல், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்

பொறுப்பின்றி பணத்தைக் கடனெடுத்தல் அல்லது திரட்டுதல், மானியங்களையும் நன்கொடைகளையும் பெறுதல் அல்லது திரட்டுதல், அதன் நிதிகளை முதலீடு செய்தல், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்திற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் ஈடுபடுத்துதல், தொழிலுக்கமர்த்துதல், வேலைநீக்கம் செய்தல் என்பவற்றிற்கான தத்துவங்களையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

*கணக்குகளின் கணக்காய்வு.*

**6.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம், மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புகளும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர்களால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காளர்" என்பது -

(i) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருப்பவரும் கணக்காய்வாளர் ஒருவராகத் தொழில்புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் பேரவையால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை வைத்திருப்பவருமான தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) எந்தக் கணக்காளர் கழகத்தின் வதிவுள்ள பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக இருப்பதுடன் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் பேரவையால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவருமாக உள்ளாரோ அந்தக் கணக்காளர் கழகம் என்று பொருள்படும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7**. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குகளைக் கொண்டு உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் பதவி விலகுதல், அவர் களைப் பதவிவிலக்கல், பதவி தாங்குநர்களைத் தெரிவுசெய்தல், கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குநர்களினதும் முகவர்களினதும் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் கடமைகளை நிறைவேற்றுதல் என்பவற்றிற்காகவும் கூட்டுத்தாபனத்தாலும் நிறைவேற்றுச் சபையினாலும் அலுவல்களை நிறைவேற்றுவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைக்காகவும் அத்துடன் பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல், அதன் குறிக்கோள்களை எய்துதல் என்பவற்றிற்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராத விதிகளைக் காலத்துக் குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையான தாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும் அதேபோன்ற கூட்டமொன்றிலும் அதே முறையிலும் அவை மாற்றப்படலாம். அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம், திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் கூட்டுத் தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

மன்றத்தின் வருமானத்தையும் ஆதனத்தையும் பிரயோகித்தல்.

**8**. கூட்டுத்தாபனத்தின் வருமானமும் ஆதனமும் இதன்கண் தரப்பட்டுள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஊக்குவிப்பதற்காக மாத்திரமே பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவற்றின் பாகம் எதுவும் பங்கிலாபம், கடன், பணிக்கொடை, இலாபம் அல்லது வேறுவகையில் கூட்டுத்தாப னத்தின் உறுப்பினர்களுக்கு நேரடியாகவோ அல்லது நேரடியாக அல்லாமலோ செலுத்தப்படுதலோ மாற்றப்படுதலோ ஆகாது.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**9**. கூட்டுத்தாபனம் ஏதேனும் கொள்வனவு, மானியம், நன்கொடை, விருப்பாவணக் கொடையளிப்பு என்ற வகையில் அல்லது வேறு முறையில் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுவதற்கும் வைத்திருப்பதற்கும் சட்டத்தில் இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய எல்லா ஆதனமும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகை யில் கையுதிர்க்க உள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத் தால் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

**10.** இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குள்ள அதன் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் ஒப்பப்பணங்கள், கட்டணங்கள், உதவுதொகைகள் என்பன காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு அத்தேதியன்று மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலதான எல்லாத் தனிசுகளும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காக கூட்டத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும். *மன்றத்தால் செலுத்தப் படற்பாலனவும் மன்றத்திற்குச் செலுத்தப் படற்பானவுமான தனிசுகள்.*

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினை கூட்டுத்தாபனத்தின் தலைவரினதும் செயலாளரினதும் அல்லது பொருளாளரினதும் முன்னிலையிலன்றி சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தங்கள் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதல் சாட்சியொருவராக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதினின்று தனிவேறானதாதல் வேண்டும். *கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் செலுத்தித்தீர்க்கப்பட்டதன் பின்னர் ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும் அல்லது உடையனவும் ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுவதினின்று அதன் அல்லது அவற்றின் விதிகளால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப்பட்டவையுமான ஏதேனும் வேறு நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது மாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம், கலைக்கப்படுகையில் அல்லது அதற்கு உடன்முன்னராக கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். *கூட்டுத்தாபனம் கலைக்கப்படு வதன்மீது எஞ்சியிருக்கும் ஆதனம்.*

**13.** இச்சட்டத்தின் அடங்கியுள்ள ஏதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவின் உரிமைகளையேனும் பாதித்தலாகாது. *குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387 :* (வெளிநாடு) ரூபா *1,849 :* ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்